பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 06 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** அமெரிக்க கடற்படை தாக்குதலில் இந்திய மாலுமிகள் **3** பேர் உயிரிழந்ததற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**2.** அகமதாபாத் விமான விபத்து தொடர்பாக சர்வதேச விதிமுறைகளின்படி விசாரணை முறையாக நடைபெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

**3.** பஞ்சாபில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் **117** தொகுதிகளிலும் பிஜேபி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

**4.** அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

**5.** உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் கனடா - போஸ்னியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அமெரிக்க கடற்படை தாக்குதலில் இந்திய மாலுமிகள் 3 பேர் உயிரிந்ததற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அமெரிக்க வெளியுறத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோவிடம் தொலைபேசியில் பேசி தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், வணிகக் கப்பல் போக்குவரத்திற்கு எதிராக இத்தகைய கொடிய தாக்குதல்கள் நடத்தப்படுவது நியாயமற்றது என்று தெரிவித்துள்ளார்.

ஓமன் கடற்கரை அருகே பலாவ் நாட்டு கொடியுடன் சென்ற MT Settebello என்ற டேங்கர் கப்பல் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் உயிரிழந்தனர்.

இக்கப்பலில் மொத்தம் 24 இந்திய ஊழியர்கள் இருந்தனர்; அவர்களில் 21 பேர் மீட்கப்பட்ட நிலையில், காணாமல் போன மூன்று பேரும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது.

வணிகக் கப்பல்கள் மீது வன்முறையைப் பயன்படுத்துவது, சர்வதேச கடல்சார் வர்த்தகத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைச் சிதைக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கடந்த ஆண்டு அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது தொடர்பாக சர்வதேச விதிமுறைகளின்படி விசாரணை முறையாக நடைபெற்று வருவதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விபத்துக்கான உண்மையான காரணங்களைக் கண்டறியவும், இனிவரும் காலங்களில் விமானப் பயணங்களின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்கவும் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக கூறினார்.

இந்நிலையில் இந்த விமான விபத்து குறித்து, விமான விபத்து விசாரணை பணியகம் இடைக்கால அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், விபத்து குறித்த விசாரணை மிகவும் நேர்மையாகவும், ஆதாரங்களின் அடிப்படையிலும் முழுமையாக நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உற்பத்தி துறையில் முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சியை இந்தியா எட்டியுள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் மத்திய உற்பத்தி தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தொழில் வளர்ச்சிக்கு அளித்து வரும் முக்கியத்துவமே இதற்கு காரணம் என்று கூறினார்.

இதன் காரணமாக நாட்டில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தி சார்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதால் தொழில்துறையின் வளர்ச்சி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்து காணப்படுவதாகவும் திரு. குமாரசாமி கூறினார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்தியாவின் ஏவுகணைகள் மிக சிறப்பாக செயல்பட்டதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

உதம்பூரில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், இதன் காரணமாக இந்தியாவிடம் ஆயுதங்களை வாங்க உலக நாடுகள் மிகுந்த ஆர்வம் காட்டுவதாக கூறினார்.

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நாட்டின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி 174 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தோனேஷியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளுக்கு ஆயுதங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாகவும், ஆயுதங்களுக்காக மற்ற நாடுகளை இந்தியா சார்ந்திருந்த நிலை மாறிவிட்டது என்றும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

தஜிகிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங், பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் மற்றும் நிதியுதவி தருவது, எல்லைதாண்டிய பயங்கரவாதம் ஆகியவை மனிதநேயத்திற்கும், சர்வதேச விதிமுறைகளுக்கும் எதிரானது என்று கூறினார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது வெறும் பிராந்திய அளவிலான குழு மட்டுமல்ல, அது யுரேஷியா முழுவதும் வரலாற்று

மற்றும் கலாச்சார ரீதியாக தொடர்புடைய நாடுகளுடன் இந்தியாவை இணைக்கும் முக்கிய பாலம் என்றும் திரு. கீர்த்திவர்தன் சிங் கூறினார்.

<<<<>>>>

டேராடூனில் உள்ள இந்திய ராணுவ பயிற்சி கல்லூரியில் இன்று நடைபெறும் அணிவகுப்பை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பார்வையிடுகிறார்.

இந்த ஆண்டு முதன்முறையாக பெண் அதிகாரிகள், தங்கள் ஆண்களுக்கு நிகராக அணிவகுப்பில் பங்கேற்க உள்ளதாகவும், இது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் அந்த கல்லூரி கூறியுள்ளது.

இந்த அணிவகுப்பை தொடர்ந்து 500-க்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் அதிகாரிகள் ராணுவத்தில் அதிகாரிகளாகப் பொறுப்பேற்க உள்ளனர்.

இந்த அணிவகுப்பு என்பது வெறும் ராணுவ மரபு மட்டுமல்ல, தேசத்திற்குச் சேவை செய்ய இளம் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் இருப்பதை குறிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பஞ்சாபில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் 117 தொகுதிகளிலும் பிஜேபி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

புதுதில்லியில் இது தொடர்பாக மாநில பிஜேபி தலைவர்களுடன் மூத்த தலைவர் திரு. அமித் ஷா, கட்சியின் தலைவர் திரு. நிதின் நபின் ஆகியோர் நேற்று ஆலோசனை நடத்தினர்.

இந்தக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி பஞ்சாப் மாநில செயலாளர் திரு. கேவல்சிங் தில்லான், தற்போது மாநிலத்தில் பிஜேபி எந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைக்கவில்லை என்று கூறினார்.

பஞ்சாப் மாநிலத்தில் தற்போதுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியில் இருந்து அம்மாநிலம் மீண்டு வருவதற்கு இரட்டை எஞ்சின் அரசு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

அணுசக்தி பேச்சுவார்த்தை தொடர்பாக இடைக்கால ஒப்பந்தம் முறையாக செயல்படுத்தப்பட்டால் மட்டுமே அமெரிக்காவுடன் ஈரான் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆரம்பகட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு தனது கடமைகளை நிறைவேற்ற ஈரான் 60 நாட்கள் கால அவகாசம் வழங்கும் என்றும், அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் அமெரிக்கா தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் ஒப்பந்தம் கையெழுத்தாகாது என்று அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த காலத்தில் அமெரிக்கா அளித்த வாக்குறுதிகளை மீறி உள்ளது என்றும் அவர் கூறினார்.

தங்கள் நாட்டுப் பாதுகாப்பிற்கு ஐ.நா. சபையையோ, பிற சர்வதேச அமைப்புகளையோ ஈரான் சார்ந்திருக்கவில்லை என்றும் திரு. அராக்சி தெரிவித்தார்.

<<<<>>>>

அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அடுத்த இரண்டு நாட்களில் அருணாச்சலப்பிரதேசம், பீகார், கேரளம், மாஹே, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, ஒடிசா, இமயமலை ஒட்டியுள்ள மேற்குவங்கம், சிக்கிம் மாநிலங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களில் மகாராஷ்டிரா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், மேற்குவங்கம், ஒடிசா, ஜார்கண்ட், பீகார் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் தென்மேற்கு பருவமழைக்கான சாதகமான சூழல் நிலவுகிறது.

தில்லி, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், இமாச்சலப்பிரதேசம், உத்தரகண்ட், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் ஜார்கண்ட் ஆகிய இடங்களில் நாளை வரை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு தில்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது.

அதேநேரத்தில், மராத்வாடா, விதர்பா மற்றும் மேற்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் இன்று வெப்ப அலை வீச வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

புவிசார் குறியீடு பெற்ற புகழ்பெற்ற தேஜ்பூர் லிச்சி பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியை, அசாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வ சர்மா நேற்று தொடங்கி வைத்தார்.

கவுகாத்தி விமான நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சிங்கப்பூருக்கு **500** கிலோ எடையுள்ள 'பியாஜி' ரக லிச்சி பழங்கள் அடங்கிய பெட்டிகள் விமானத்தில் ஏற்றப்பட்டது.

நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வ சர்மா, கடந்த சில ஆண்டுகளாகவே தேஜ்பூர் லிச்சி பழங்கள் சர்வதேச சந்தையில் தங்களுக்கு என ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

சில நாட்களுக்கு முன்புதான், விவசாயம் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மூலம், ஆயிரம் கிலோ லிச்சி பழங்கள் துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

துபாயைத் தொடர்ந்து தற்போது சிங்கப்பூர் சந்தையும் திறக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட அவர், இந்த முன்னெடுப்பு அசாம் விவசாயிகளுக்குப் பெரும் ஊக்கமளிப்பதோடு, வரும் காலங்களில் லிச்சி சாகுபடியை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று திரு. ஹிமந்த பிஸ்வ சர்மா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் கனடா - போஸ்னியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

டொரான்டோவில் இன்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

அமெரிக்கா - பராகுவே அணிகளுக்கு இடையேயான ஆட்டம் லாஸ் ஏஞ்சல்சில் தற்போது நடைபெற்று வருகிறது.

**<<<<The End>>>>**